விவேக்



# தடயங்கள்

# தடயங்கள்

## விவேக்

கிளிநொச்சி கலை இலக்கிய நண்பர்கள்

THADAYANGAL — A Free verse
Collection by VIVEK

First Edition : September 1987

நூல் : தடயங்கள் (புதுக்கவிதைத் தொகுதி)

ஆசிரியர் : விவேக்

அட்டைப்படம்
ஒவியங்கள் : விவேக்

அச்சுப்பதிப்பு குருகுலம் சர்வசக்தி அச்சகம், கிளிநொச்சி.

முதற்பதிப்பு : செப்டெம்பர் 1987

வெளியீடு ; கிளிநொச்சி கலை இலக்கிய நண்பர்கள்

உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூபா 10/=

# முன்னுரை

உரைநடை வடிவிலோ, கவிதை வடிவிலோ அறுபது பக்கங்களில் கூறுவதை, ஆறு பக்கங்களிலல்ல; ஆறுவரிகளில் கூறுவது புதுக்கவிதை ஆகும். ஆம், கருவில் விரிந்து உருவில் குறுகிய இலக்கிய வடிவமாக புதுக் கவிதை விளங்குகிறது. அறுபது பக்கங்களுக்குரிய பொருள் விரிவையும், குறளுக்குரிய வடிவத்தையும் அது கொண்டமைகிறது. பலர் கூறுவது போல அல்லது நினைப்பதுபோல உரைவீச்சாக கலம் அமைப்பில் வார்த்தைகளைத் தொகுப்பது புதுக்கவிதையாகாது. என்னைப் பொறுத்தவரையில் தமிழுக்குப் புதுக் கவிதை புதியதொரு இலக்கிய வடிவமன்று. தெய்வப் புலவர் திருவள்ளுவர் யாத்த திருக்குறள் ஒவ்வொன்றும் புதுக்கவிதைகள் தாம். விரிந்த கருவும், குறுகிய வடிவமும் இப் புதிய துறையின் இரு ஆதார இலக்கணங்களாக இன்று மாறிவிட்டன.

இந்த அளவு கோலைக் கொண்டு நோக்கும் போது தம்பி விவேகானந்தனின் (விவேக்) 'தடயங்கள்' என்ற இப் புதுக்கவிதைத் தொகுதி திருப்தியையும், மகிழ்ச்சியையும் தருகின்றது

'சமாதானத்திற்காகப் 'போராடுதல்' என்பது இன்று உலக வல்லரசுகளின் சுலோகம் மட்டுமல்ல; மூன்றும் மண்டல வறிய நாடுகளினதும் பொதுக்குரலாக இருக்கின்றது 'விவேக்' இந்நூலின் முதற்கவிதையிலேயே உலகலாவிய ஒரு பொதுத்தன்மையைத் தொட்டுக்காட்டுவதன் மூலம், சராசரிக்கவிஞன் ஒருவனின் தரத்திலிருந்து ஒருபடி உயர்ந்து விடுகிறார்

நாம்
போராடிக்கொண்டிருக்கிறோம்
ஓர்
சமாதானத்திற்காக" என்ற வரிகள் "விவேக்"கை ஆரோக்

கியமான ஒரு புதுக்கவிஞனாக நமக்கு அறிமுகப்படுத்து கிறது.

இயற்கையின் நிகழ்வுகளை மனித செயற்பாடுக ளோடு, இயக்கத்தோடு தொடர்பு படுத்தும் ஆற்றல் புதுக் கவிதையின் ஒரு சிறப்பியல்பாகும். சூழற்காரணிகளை, அவற் றின் தம்வயமான நிகழ்வுகளை, மனுக்குலத்தின் நடவடிக்கை களோடும் மனித உணர்ச்சிகளோடும் இணைத்து அற்புதமான கவிதைகள் சிலவற்றை 'விவேக்' தந்துள்ளார்,

**இது இலையுதிர் காலம்**
**மட்டுமல்ல**
**கிளைகளும்**
**முறிந்துவிழும்**
**காலம்**
**எனினும்**
**வேர்களுக்கு**
**நீரை**
**விட்டுக்கொண்டே**
**இருப்போம்'**

என்ற சுதந்திரப் பயிர்க் கவிதையும்,

**பூக்களெல்லாம்**
**அணிவகுத்து போகின்றன**
**புயலோடு போர்தொடுக்க.**

என்ற போர்க்களத்தில் பூவையர் எனும் கவிதையும் இதற்குத் தக்க உதாரணங்களாகும் இவரின் இக்கவிதைகளில் புதுக் கவிதைப் படிமம் நன்கு விழுந்துள்ளது. நிகழ்வையும், நிகழ்வின் விளைவையும், நிகழ்வின் செய்தியையும் இவரது இக்கவிதை களில் சிறப்புறக்காணலாம்.

'தடயங்கள்' என்ற இத்தொகுப்பில் பல் சுவைக் கவிதைகள் உள்ளடங்கியுள்ளன, சமகாலப் பிரச்சினைகள் வறுமை, காதல், ஏமாற்றம், ஏக்கம் போன்ற பல்வேறு உணர்வுகள் கருப்பொருட்களாகச் செறிந்துள்ளன. 'தடயங் கள், என்ற கவிதையில் சமகாலப் பிரச்சினையின் பூதாகாரத் துயரமும், மனித உணர்வின் இலட்சிய உணர்வும் சிறப்பாகச்

சித்தரிக்கப்பட்டுள்ளன, முதிரா இளமையின் காதல் ஏக்கத்தை 'விவேக்'கின் பல புதுக்கவிதைகளில் காணமுடிகிறது. எனினும், இவை யாவற்றிற்கும் மேலாக 'விவேக்'கின் சில கவிதைகளின் இறுதிவரிகள் நம் ஆத்மாவைச் சிலிர்க்க வைப்பதுடன் புதிய அனுபவத்தையும், புதிய செய்திகளையும் தரும் சிறப்பைப் பெற்றிருக்கின்றன, அவருடைய கவிதைகள் தேர்ந்தெடுத்து இயல்பாகவிழும் வார்த்தைகளின் இணைப்பால் கவித்துவச்சிறப்பையும், கலையழகையும் பெற்றிருக்கின்றன.

'விவேக்' வயதில் இளைஞர். வயதுக்குரிய அனுபவ வெளிப்பாடுகளாக இக்கவிதைகள் பல இருந்தாலும், சில கவிதைகள் அனுபவக்கவிஞன் ஒருவனின் கவிதா வெளிப்பாடுகளாகவுள்ளன. குறுகிய பார்வை வட்டத்துக்குள் அடங்காது பரந்ததோர் உலகலாவிய பார்வை 'விவேக்'கிடம் தெரிகிறது. எதிர்காலத்தில் ஈழத்திற்குப் பெருமைதரும் ஒரு கவிஞனாக 'விவேக்' நிச்சயம் மலர்வாரென்பதற்கு 'தடயங்கள்' சான்றாகின்றன,

செங்கை ஆழியான்

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
கரைச்சி, கிளிநொச்சி
15-9-87.

# அந்த வானமும் என் சிறகுகளும்

என் பயணத்தில் நான் பார்த்து, கேட்டு, அனுபவித்தவற்றில் என்னில் பாதிப்புகளை ஏற்படுத்திய நிகழ்வுகளின் தடயங்களே இக்கவிதைகள்.

கவிதை வானில் நான் சிறகு வளர்ந்த பறவை அல்ல சின்னஞ்சிறு பறவை.

பறக்க முடியுமா என்பதற்கான ஓர் பரீட்சையே இந்த முயற்சி என் சிறகுகளை பரிசோதித்துப் பார்ப்பதற்கான வெள்ளோட்டம்.

புதுக் கவிதைகள் நெடுங்கவிதைகளாக இருப்பதிலும் பார்க்க சுருங்கக் கூறி விளங்கவைக்கும் குறுங் கவிதைகளாக அமைவதில் உள்ள அழகையும் சிறப்பையும் புதுக்கவிதை மன்னன் மு.மேத்தா அவர்களின் கவிதைகளில் நிறையப் பார்த்திருக்கிறேன். அதைப்போல் நானும் கொஞ்சம் முயன்று பார்த்திருக்கிறேன்.

நான் கவிதைக்குள் காலடி எடுத்துவைத்தது 1982ம் ஆண்டாகும். என் முயற்சிகளுக்கு முதலில் களம் அமைத்துக் கொடுத்த சிந்தாமணி பத்திரிகைக்கும் தொடர்ந்து என்னைத் தட்டிக்கொடுத்து ஊக்குவித்த சஞ்சீவி, ஈழமுரசு, மாலைமுரசு முரசொலி, ஆகிய பத்திரிகைகளுக்கும் மிகவும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

இத்தொகுதிக்கு சிறப்பு சேர்க்கும் வண்ணம் சிறந்ததொரு முன்னுரையை வழங்கி என்னை ஊக்கப்படுத்திய ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், நாவலாசிரியருமான மதிப்பிற்குரிய திரு. செங்கை ஆழியான் அவர்களுக்கும், இத்தொகுதியில் மட்டுமல்லாது பத்திரிகைத் துறையிலும் என்னை அறிமுகம் செய்துவைத்த எனது ஆசிரியர் மதிப்பிற்குரிய

திரு எஸ். திருச்செல்வம் அவர்களுக்கும் பணிவான நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் உயர உயரப் பறக்க வேண்டுமானால் என் சிறகுகள் பலப்படவேண்டும். வாசகர்களின் சிறந்த விமர்சனங்களே ஆரோக்கியமளிக்கும் ஔடதங்கள். அவற்றை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கிறேன்.

133/1 ஜெயந்திநகர்,
கிளிநொச்சி,
15-09-1987

அன்புடன்
விவேக்

பூக்களை
சூடப்போய்
முட்களை
வாங்கிக்கொண்ட —

முற்றுப்புள்ளி
வைக்கப்போய்
கேள்விக்குறியாகிப்போன —

இளைய
இதயங்களுக்கு
இது
சமர்ப்பணம்



முடிவுக்

கான

ஆரம்பம்

●

நாம்
போராடிக்கொண்டிருக்கிறோம்
ஓர்
சமாதானத்திற்காக !

பூமி அதிர
சத்தங்களை
ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்
ஓர்
அமைதிக்காக !

●



அஸ்தமனத்தை
அறிவிக்கும்
எங்கள்
அதிகாலைகள்
பூபாளத்திற்கு பதிலாக
முகாரியையே
முன்வைக்கும்.

பூமியில் கேட்கும்
முழக்கங்களால்
மேகங்கள்
மோதிக்கொள்வதை
நிறுத்தி
வாய்பொத்தி
நிற்கும்.

துரத்திக்கொண்டுவரும்
துப்பாக்கி ரவைகளால்
தென்றல் காற்று
கிழிபடும்..

„‘ஷெல்’’லக்குழந்தைகள்
மனித பொம்மைகளின்
அங்கங்களை
சுழற்றி விளையாடும்.

பொட்டிழந்த
எங்கள்
பெண்ணிலவுகளை
சோக மேகங்கள்
ஆக்கிரமித்துக்கொள்ள
அமாவாசை
அவர்களிடம்
நிரந்தரமாகும்.

குருதியலைகள்
மோதிப் பாய்ந்து
கீழ்வானை
சிகப்பாக்கும்.



எங்களின்
நாட்கள்

# சுதந்திரப் பயிர்

●

எங்கள்
சோலைகளின்
மலர்களெல்லாம்
மடிந்து
சருகாகின்றன.

இது இலையுதிர் காலம்
மட்டுமல்ல
கிளைகளும்
முறிந்துவிழும்
காலம்.

எனினும் —

வேர்களுக்கு
நீரை
விட்டுக்கொண்டே
இருப்போம்.

●




●

பாசிஸ மிருகங்களால்
பறிக்கப்பட்டு
பாதத்திலிட்டு
மிதிக்கப்பட்ட

பல நிற
மலர்களிலிருந்தும்
சிதறிய
விதைகளிலிருந்து
ஆயிரமாயிரம்
தளிர்கள் முளைக்கும்.

இனி அந்தப்பூக்கள்
சிகப்பாகப்பூக்கும்

●



புரட்சி

# விழிப்பு

இரவில் தூங்கி
விடிந்ததும்
விழித்தெழுவது
வியதி.

எமக்கு
விடிய வேண்டுமெனில்
விழித்தே
இருக்க வேண்டும்
என்பது
நீதி.

# உணர்வுகள்
# மரணிப்பதில்லை

"வசந்தத்தின்
வருகைக்காகவே
வாசல் படிகளானோம்.

சரித்திரம் ஒன்றை
புதிதாய் எழுதிடவே
உதிரத்தை
மையாக்கினோம்.

புரட்சித்தளிர்கள்
பூப்பதற்காக
இந்த மண்ணில்
நாமே
உரமானோம்,

நாம் மரணிக்கவில்லை
உதயத்தை விரும்பும்
உள்ளங்களிலெல்லாம்
உணர்வுகளாய்
ஜீவிக்கிறோம்."

## பாட்டாளி

●

மனிதப் புற்களுக்கு
மழை பொழியும்
கார் மேகம்,

வாழ்க்கை வானில்
சந்தோஷத்தின்
மின்னலைக்கூட
இவன்
சந்தித்ததில்லை

இடிகளை
மட்டுமே
வாங்கிக்கொள்கிறான்
இதயத்தில்

●

# போராளி

நிலவாக இருந்தவன் தான்
அவன்
நெருப்பின் வெப்பத்தால்
சூரியனானான்.

பூவாக இருந்தவன் தான்
அவன்.
புயல வந்து மோதியதால்
பூகம்பமானான்.

நாலுபேர் போல்
நடந்து திரிந்தவன் தான்
அவன்.

கால்கள் காயப்பட்டதனால்
சிறகுகளை கட்டிக்கொண்டான்.

நிலவாக இருந்தவன் தான்
அவன்.

## அவமானம்

உன் விழியாற்றில்
குளித்துக் கொண்டிருந்தபோது
காதல் அலை
மோதியதால்
என் ஆடை அவிழ்ந்து
ஓடிவிட்டது.

இருட்டில் தான்
இனி
கரையேற வேண்டும்.

# வறட்சி

●

கார்மேகம்
வானத்தோடு
கோபித்துக்கொண்டது.

குளங்களிலெல்லாம்
வறுமை .

பூமிப்பெண் தன்
வயல் ஆடைகளை
இழந்து
அரை நிர்வாணம்.

நீர்ப்பாசன
பொறியியலாளர்களுக்கு
ஓர் ஆலோசனை.

இங்கே —
பெருக்கெடுத்துப்பாயும்
கண்ணீர் நதிகளை
குளங்களில்
தேக்கிவைத்தாலென்ன ..?

●

## தூண்டில் போடும் மீன்கள்

●

மீன்களே
தூண்டில் போடும்
விந்தையை கண்டு
வியந்து போனேன்.

ஓ ..!
அவளின் விழிகள் ...

●

# ஒருவழிப்பாதை



விழிவாசல்
வழியாக புகுந்து
அவளின்
இதயவீட்டுக்குள்
பிரவேசித்தேன்.

வெளியேற
நினைத்தபோது
வழிதெரியவில்லை.

பின்புதான் புரிந்தது
அது —
ஒருவழிப்பாதை என்று.

## ஏமாற்றம்

என் தோட்டத்து
ரோஜாச்செடி
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு மலரையே
பிரசவிப்பது
உன்
கூந்தலுக்காகத்தான்.

உன் தோட்டத்து
பூச்செடிகள்
பூப்பூத்ததெல்லாம்
என்
காதுகளுக்காகத்தான்
என்பதை
கடைசியாகத்தான்
தெரிந்து கொண்டேன்.

# வறுமை

அந்த
குடிசைக்குள் சென்று
அடுப்பைப்பார்த்தேன்.

நெருப்பும் இல்லை
புகையும் இல்லை.

தேடிப்பார்த்து
தெரிந்து கொண்டேன்.

புகைந்தது
குழந்தையின் வயிற்றுக்குள்!
நெருப்போ—
தாயின் நெஞ்சிக்குள்!

## சுவடுகள்

கடற்கரையில்
பதிந்த
நம்
காலடிச்சுவடுகள்
அலைகளினால்
அழிக்கப்பட்டுவிட்டன.

இதயத்தில்
பதிந்த
காதலின் சுவடுகள்
வாழ்க்கையையே
அரித்துக்கொண்டிருக்கின்றன,

# சோதனை

●

பெண்ணே...
என்
சிந்தனைகள்
செல்லும் வழியில்
உன்
ஞாபகங்களிடம்
சிக்கிக்கொண்டு
கடக்க முடியாமல்
எவ்வளவு
கஷ்டப்படுகிறது
தெரியுமா ?

ஆளையிறவைக்கடக்க
அவதிப்படும்
வாகனங்களைப்போல ...

●

## கானல்வரி

●

முகத்தைப் பார்த்தேன்
முகவரியை தந்தாய்.

நான்
காதல் வரிகளை
கவிதையாக்குமுன்பே

கானல் வரிகளை
காட்டிவிட்டாயே!

●

## நிலவும்
## குளமும்

அந்த
குளமும் நிலவும்
கணவன் மனைவி

அல்லி மலர்
அவர்களின் குழந்தை

நம்ப மாட்டீர்களா ...?

என்னோடு வாருங்கள்
இரவில்
காட்டுகின்றேன்

அந்த
குளத்தின் மடியில்
நிலவு
மயங்கிக்கிடப்பதை ...!

# கவிதையில்
# நிரந்தரம்

மாலையிட
வந்தோரையெல்லாம்
மறுத்து விட்டாய்.

வாழ்வில் எதுவுமே
நிரந்தர மில்லை என
வருத்தப் படுகிறாய்.

என்
நெஞ்சிலோர்
நெருடல்
உன்னை
நிரந்தரப்படுத்த வேண்டும் என்று.

அதனால் தான்
உன்னை
ஓர்
கவிதையாக்கிவிட்டேன்.

## காதலன்வரவு
## எண்ணி....

அந்த மரங்கள் ஏன்
ஆடைகளை
அவிழ்த்து விட்டு
நிர்வாணமாய்
நிற்கின்றன

அவ்வளவு
வறுமையா...?

இல்லை இல்லை
அதோ
வந்து கொண்டிருக்கிறான்
வசந்த காதலன்
புத்தாடை சுமந்து!

# விரோதம்

●

வெளிச்சத்துக்கு
அவை விரோதியா
அவைக்கு
வெளிச்சம் விரோதியா ....?

விளக்கை
அணைக்க வந்து
மரணத்தை
அணைத்துக் கொண்டன

ஓ...!
அந்த விட்டில்கள்

●

காலங்கள்
காத்திருப்பதில்லை

●

நான்
வீட்டுக்குள்ளிருக்க
என்னை தினமும்
ஜன்னலில் வந்து
பார்த்துவிட்டுப் போனது
அந்த நிலா !

அமாவசையன்று தான்
நான்
வெளியே சென்று
பார்த்தேன் .

●

## ஒரு
## நண்பனின்
## கதை

இளமை சுகங்களை
மட்டுமே
தேடிப்போன வழியில்
அவளை அவன்
சொந்தமாக்கிக் கொண்டான்

வறுமை அவனை
தேடிவந்தது.
கடன் காரர்
தேடிவந்தனர்

அவன்
வெளிநாடு ஓடினான்
பணத்தைத் தேடி.

இருவருடங்களின் பின் —
திரும்பிவந்து
தேடிக்கொண்டிருக்கிறான்

தன் மனைவியை !

# பாவம் அவர்கள்

●

அந்த
சாராயக்கடையில்
அத்தனை பேர் கூடி
என்ன செய்கிறார்கள் ...?

பாவம் அவர்கள் !

மனதில்
ஊத்தைகளாக
படிந்துவிட்ட
கஷ்டங்களையும்
சோகங்களையும்
கழுவ முயல்கிறார்கள் !

●

# இல்லாள்

துப்பாக்கி ரவைகள்
துளைக்கும்

குண்டுகள் வெடித்து
குதறும்

"ஷெல்" விழுந்து
சிதறும்

இம்மூன்றையும்
ஒரே தடவையில்
செய்வாள்
இல்லாள்
தன்
சொல்லால்.

# நிலாக்காலம்

●

நீலத்தடாகத்தில்
மூழ்கிக்குளித்துவிட்டு
நிலவு மங்கை
நீந்தி வெளிவருவாள்.

காற்றுத்துச்சாதனன்
கைகளை நீட்டி
மேக ஆடையை
ஓயாமல் உரிந்திடுவான்.

நிலவுப் பெண்ணவளின்
நிர்வாணம் காண
வயதுக்கு வராத
வான விண் மீன்கள்
வரிசையாய் வந்து
வட்டமிட்டு
கண்சிமிட்டும்.

நிலவின் நிறத்தை
மரங்கள் கடன்வாங்கி
நிலத்தின் மீது
புதுக்கோலம்
வரைந்து நிற்கும்

நீலக்கடலலைகள்
நிலவின் வதனத்தை
முத்தமிட மேலுயர்ந்து
முடியாமல் தோல்வியுறும்.

ஆனாலும்...

ஓலைக்குடிசைகளில்
ஓய்ந்து படுத்திருக்கும்
ஏழை எளியவர்க்கு
ஏதேனும் சுகம்வருமா?

கொடிய இருள் நடுவே
விடியலைத் தேடியழும்
விழிகளுக்கின் னிலவு
நிரந்தர ஒளிதருமா?



## தடயங்கள்

"காதலனே
உன்
கட்டளைப்படி
இங்கு நீ
வந்துபோன
தடயங்களையெல்லாம்
அவர்களுக்கு
தெரியாமல்
அழித்து விட்டேன்.

ஆனால் அன்பே.—

மனதில் நீ
தந்துபோன
தடயங்களையெல்லாம்
எப்படி என்னால்
அழிக்க முடியும்...?"

"பிரியமானவளே –
உன்னை
பிரிய மனமில்லை
ஆனாலும்

சேர்வதற்கும்
இது
வேளை இல்லை

பிரிவு என்றதும்
உன்
இமைகளின் பிரிவில்
எனிந்த
ர்த்துளிகள் ...?

பேதைப்பெண்ணே
கண்களை
துடைத்துக்கொள்

விடியலை நோக்கி
விரைகின்ற பாதையில்
எத்தனை எத்தனை
இன்னுயிர் தோழர்களை
இழந்து கொண்டிருக்கிறேன் நான் . . .
அது உனக்கு
தெரியாததா ?

இனமே
தீயிடப்பட்டுக்கொண்டிருக்கும்
வேளை
எம் மிருவர் வாழ்வில்
தீபாவளிகள்
வரமுடியுமா ?

உன் வர்க்கத்தின்
நெற்றிகள்
வெறுமையாகும்
வேளை
நீமட்டும்
குங்குமத்தை
விரும்புவது
நியாயம்தானா ?

இது
இலையுதிர்காலமல்ல
கிளையுதிர்காலம்

வசந்தம் இங்கு
வரமுடியாமல்
வாசல் கதவுகள்
பூட்டப்பட்டுள்ளன.

பூட்டை
உடைக்கவே
புறப்பட்டேன்
இப்போது

முடிந்தால் அதுவரை
காத்திரு.

வருவேன் விரைவில்
வசந்தத்தை அழைத்து "




காத்திருந்தால்
வருவேன்

சுதந்திரம் ...?     சுதந்திரம் ...?     சுதந்திரம் ...?

## சுதந்திரம் ...?

அந்த
வானத்தையே
இங்கு
வரவழைப்பேன்'
என்கிறாய்

சிறகுகளை
நீயே
சேதப்படுத்திவிட்டு!



அடிக்கடி
அடிக்கடி
அமைதியை உரைக்கும்
அதிஉத்தமனே

நெருப்புப்பறவைகளை
நீ இங்கு
அனுப்பிவிட்டு

சமாதானப் புறாக்களை
சாகடித்துக் கொண்டிருக்கிறாய்



சமாதானம்
சாகடிக்கப்படுகிறது.

# முற்றுப்புள்ளி

●

சோகத்தின்
வரிகளே
நாம் நடக்கும்
பாதை

அந்தப்பாதையின்
முன்னால்
ஓடிக்கொண்டிருக்கும்
ஒருவனைக்கேட்டேன் -

"தோழா ...
முடிவின்றி போகும்
இப்பாதை வழியாக
எங்கே
போய்க்கொண்டிருக்கிறாய் ?,,

" முற்றுப்புள்ளி வைக்க "

●

## இந்தியா

ஆறாத புண்ணால்
அழுது கொண்டிருக்கும்
குழந்தைக்கு

ஆழ்ந்த
அனுதாபங்களையும்
கவலைகளையும்
மட்டுமே
அடிக்கடி
அனுப்பிவைக்கும்
அன்பான அன்னை

---

(இப்போது இக்கவிதையை வாபஸ் பெறலாமா?)

ஒரு
கல்லறை பேசுகிறது

" என்
கல்லறை முன்னால்
நின்று
ஏன் கண்ணீர்
வடிக்கிறீர்கள்

ஒரு மனிதனின்
மரணத்தால்
ஆனதல்ல இது

புதிய
ஜனனங்களுக்காக
ஏற்படுத்தப்பட்டது "

## போர்க்களத்தில்

பூவையர்

●

பூக்களெல்லாம்
அணிவகுத்து போகின்றன
புயலோடு போர்தொடுக்க

அன்று அவை
பூஜைக்கு தயாரானபோது
முட்களுடனெல்லாம்
முரண்பட்டுக்கொண்டன

இன்று —
முட்கள்தான்
அதன்
முதலாவது ஆயுதம்

ஏனெனில் —

பூக்களெல்லாம்
அணிவகுத்து போகின்றன
புயலோடு போர்தொடுக்க

●

## இருட்டுக்குள்...

நம்
கனவுகள்
பலித்திட
ஏன் இந்த
காலதாமதம்....?
[illegible]
இத்தனை நாளும்
நாம்
வெளிச்சத்தைத்தேடி
வெளியே செல்லவில்லை

எதிர் பார்த்து
எதிர்பார்த்து
இருட்டுக்குள்ளேயே
இருந்துவிட்டோம்

படிப்பு

படித்து
பட்டம் பெற்ற
பலபேர்
ஏன்
சமுதாய வாழ்வில்
சரிந்து போனார்கள்

பாவம்
பரீட்சைக்கு
விடையெழுத
மட்டுமே
பயின்றவர்கள்
அவர்கள்

## குழி ஒன்று
## தோண்டுவோம்


எதிரி
குழிதோண்டிக்கொண்டிருக்கிறான்
எம்மை
ஒட்டு மொத்தமாக
வெட்டிப்புதைக்க

எம்மை நாமே
வெட்டிக்கொண்டிருக்கிறோம்
சாதி, மதம், வர்க்கம்
என்று கூறுகளாக

அதோ
பொம்பர் வருகிறது

பதுங்கு குழி தோண்டுமுன்
வாருங்கள்
குழியொன்று தோண்டுவோம்

இந்த பேதங்களையெல்லாம்
போட்டு
புதைப்பதற்கு !



விடியும் வரை.....

●

இங்கே பாயும்
இரத்த ஆறுகளை
கண்டு
அவலப்படாதீர்கள்

விடிவானம் எப்போதும்
சிகப்பாகத்தானிருக்கும்

விடிந்த பின்பே
நீலமாகும்

●

# தடைகள்

எதிரியே
உன்னால்
என்னவெல்லாம்
முடியும்?

அன்று
எம்மில்
ஆயிரம் கரங்களுக்கு
விலங்கை மாட்டினாய்

அன்றே—
பல்லாயிரம்
கரங்கள் எழுந்து
விடுதலைக்காய்
சத்தியம் செய்துகொண்டன.

நூறுதலைகளை
உருட்டிவிட்டு
கதையே முடிந்ததென
கர்ஜனை செய்தாய்

முட்டாள் எதிரியே
முடிந்ததா கதை
அன்றுதானே
ஆரம்பமே ஆனது.

எம்
சோலைகளையெல்லாம்
'கொக்கட்டிச்சோலை'களாக்கினாய்
புதிய விதைகள்
முளைத்திட
உரம் அங்கே
உண்டானது

எரிபொருள் தடை
ஏற்பட்ட பின்பு
இன்னும் சுடராய்
எரிகிறது
எம் விடுதலை தீபம்

சிற்றுளியின்
சித்திரவதைக்குள்ளாகியே
சிலையாகிறது
கல்

நீ கொடுக்கும்
ஒவ்வொரு அடியும்
விடுதலைக்குதிரையின்
வேகத்தை
அதிகரிக்கிறது

அடிவானின்
சிகப்பைப்பார்த்து
அஸ்தமிக்கப்போகிறதென
ஆர்ப்பரிக்கும் உன்னை
என்னவென்றழைப்பது...?

அது
அஸ்தமனச்சிகப்பல்ல
விடியலின் சிரிப்பு.
●

# மாறுதல்கள்

●

அன்புள்ள நண்பா
உன்
மடல் கிடைத்தது
மகிழ்ச்சி

கடல் கடந்து
சென்று நீ
களித்திருக்கும்
தேசத்தின்
அழகையெல்லாம்
வடித்து
அற்புத மடல் வரைந்தாய்

அங்கெல்லாம்
நீ கண்ட
வானுயர் மாடங்களையும்
யௌவன சிலைகளையும்
இன்னும் இன்னும்
எத்தனையோ
விடயங்களையும்
விவரித்திருந்தாய்

அந்நிய மண்ணின்
அழகிலே திளைத்திடும்
நீ
உன் சொந்த மண்ணின்
அவலங்களை
கொஞ்சமாவது
அறிய விழைந்தாயா ?

அந்த
அழகுக்கோலங்கள்
கண்களை
ஆக்கிரமித்துக்கொள்ள
இந்த
அவலங்கள் எல்லாம்
மறைந்து கொண்டனவா ?

வேதனைப்படுகிறேன்
நண்பா
வேதனைப்படுகிறேன்

அன்றொருநாள் நீயும் நானும்
நம் நண்பர்கள்
குழாமும்
சேர்ந்து விளையாடிய
இடங்கள்

மகிழ்ந்திருந்த
மலர் வனங்கள்
கைகோர்த்துத்திரிந்த
வீதிகள்

படித்த
பள்ளிக்கூடம்
நூலகம்
சந்தித்த மனிதர்கள்
பற்றிய
மனப்பதிவுகளை
மீண்டும் ஒருமுறை
மீட்டுப்பார்

எவ்வளவு இனிய
நாட்கள் அவை !
எவ்வளவு இனிய
இடங்கள் அவை !
எவ்வளவு இனிய
மனிதர்கள் அவர்கள் !

இப்போது இங்கு
ஒன்றுமே இல்லை

கால் பந்து விளையாடிய
மைதானம்
காக்கியுடை அரக்கரின்
கூடாரம்

சோலைகள் யாவும்
தீய்ந்து
பாலைகளாயின
வீதிகளெல்லாம்
ஓரே
வெறுமை
அதுமட்டுமா....?

மாற்றங்கள்
எம்
மனங்களிலும்தான்

மனதில் அன்றிருந்த
மெல்லிய சலனங்கள்
இளமை உபாதைகள்
எல்லாம் இப்போது
இல்லவே இல்லை

உறுதியான
உணர்வலைகளால்
அவை
அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

●



**தி**ரு. மு. விவேகானந்தன் மிகத் துடிப்பான இளைஞர் எப்பொழுதும் ஏதாவது ஒரு காரியம் 'தமிழுக்காக'ச், செய்துகொண்டிருக்க வேண்டும் என்ற துடிப்பை 'விவேக்' கிடம் எவ் வேளையிலும் காணக்கூடியதாக இருக்கும்.

இளமைத்துடிப்புடன் இனிமையாகப் பேசவும் தெரிந்த இவரை முதன் முதலில் சிறந்த பத்திரிகையாளனாகவே நான் சந்தித்தேன். ஈழமுரசு பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியராக நான் கடமையாற்றிய வேளையில் 1984 ல்இச்சந்திப்பு நிகழ்ந்தது.

பின்னர் கட்டுரையாளனாக, சிறுகதை எழுத்தாளனாகவெல்லாம் தரிசிக்க நேர்ந்தபோது. நான் ஆச்சரியப்படவில்லை - எனது எதிர்பார்ப்புகள் நிதர்சனமாகிக் கொண்டிருந்தன.

சில மாதங்களுக்கு முன் மு. மேத்தாவின் புதுக் கவிதைத்தொகுதியொன்றை மேய்ச்சலிட நேர்ந்தது. சில தினங்களுக்கு முன்னர் 'விவேக்'கின் தடயங்கள், தொகுதியின் புதுக்கவிதைகளைப் படிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இரவு படுக்கைக்குச் சென்ற வேளை, இரண்டும் மனதில் அலைமோதின. மேத்தாவின் கவிதைகளை 'விவேக்'இன் கவிதைகளிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது போய்விட்டது
அவர்— வளர்ந்த கவிஞன்
இவர்— இளங்கவிஞன்
ஆனால், இருவரின் எழுத்துக்குமிடையில் வேறுபாடுகளெதையுமே என்னால் காணமுடியவில்லை.

'விவேக்'கின் தடயங்கள் ஆழமானவை. அர்த்தம் நிறைந்தவை. நின்று நின்று தத்துவம் பேசுபவை.

தடயங்கள் புதுக்கவிதை வரலாற்றில் ஒருமைல்கல்!

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி
15-09-1987